# போர்வாள்



# காந்தியார் கொல்லப்பட்டாரா?

## நம்ப முடியவில்லையே!

★

## என் மனம் பதறிற்று—இந்தியாவும் பதறி இருக்கும்

★

### உத்தமர் மறைவு—பெரியார் அறிக்கை.

★

காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டார் என்கின்ற சேதியானது எனக்குக் கேட்டதும் சிறிதுகூட நம்ப முடியாததாகவே இருந்தது. இது உண்மை தான் என்ற நிலை ஏற்பட்டதும் என் மனம் பதறிவிட்டது. இந்தியாவும் பதறி இருக்கும். கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகவே, தோழர் காந்தியார், இப் பரந்த துணைக்கண்ட மக்களின் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டியாய் இருந்துவந்தார்; பல திறப்பட்ட எல்லா வகுப்பு மக்களுக்கும் நியாயமாகவும் பாரபட்சமற்ற முறையிலும் நடந்துவந்தார். மக்களுக்கு அவரது தொண்டு மகத்தானது. அவரது இலட்சியக்கோட்பாடுகள் உலக மரியாதையினை ஏற்றுவிட்டன.



வட இந்தியாவில் நடைபெற்றுவரும் கலவரங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாயிருப்பது மதவெறியே யாகும். இக் கொலை பாதகத்துக்கும் மதமும் வைதீகமும்தான் தூண்டுகோலாய் இருந்திருக்கலாம் என்பது என் கருத்து.

இக் கொலைக்குத் திரை மறைவில் பலமான சதிமுயற்சி இருந்தே இருக்கவேண்டும். அதுவும் காந்தியார், எந்த மக்களுக்கு ஆகப் பாடுபட்டாரோ—உயிர் வாழ்ந்து வந்தாரோ, அவர்களாலேயேதான் இச் சதிச்செயல் ஏற்பட்டிருக்கவேண்டும். இது மிக மிக வெறுக்கத்தக்க காரியமாகும்.

இவரது காலி ஸ்தானம் எப்படிப் பூர்த்தி செய்யப்படும் என்பது ஒரு மாபெரும் பிரச்சினையே ஆகும். ஏனெனில் இவரின் இடத்தை நிறைவு செய்பவர் இத்துணைக் கண்டத்தில் எவருமே இல்லை.

இப் பெரியாரின் இப் பரிதாபகரமான முடிவின் காரணமாகவாவது இத்துணைக் கண்டத்தில் இனி அரசியல் மதஇயல் கருத்து வேற்றுமையும் கலவரங்களும் இல்லாமல் இருக்கும்படி மக்கள் நடந்துகொள்ளுவதே அவரை நாம் மரியாதை செய்வதாகும்.

தென்னாட்டுத் திராவிடர்கள் இயல்பாகவே நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ வைப்பர்.

ஈ. வெ. ராமசாமி.

# ோர்வாள்

...கள்: காஞ்சி. மணிமொழியார்
...ளஞ்செழியன், B.A. (Hons.)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளிநாடு அணா 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1979
தை 25
7—2—48 சனிக்கிழமை

வீச்சு
25


## உத்தமர் மறைவு

காந்தியார் ஒரு மனிதரல்ல, ஒரு தத்துவம். அளவுக்கு மீறி நல்லவராய் இருப்பது எவ்வளவு அபாயகரமானது என்பது காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டதிலிருந்து நன்கு தெரிகிறது.

—பெர்னார்ட் ஷா.

# ...தியத் தந்தை:

# அன்பின் திருவுரு

## ...கத்தின் சிகரம்: அஞ்சாமையின் சின்னம்

## ...புரட்சி பல கண்ட போர்க்களத் தலைவன்

...ன்தாஸ் கரம்சந்த் காந்தி— ...ர் இட்ட பெயர்! —ஆயிரமாயிரம் மக்க ...ள்ளத்திலிருந்து உருண் ...வந்த அன்பு மொழி! ...ா என்று சொன்னாலும் ...ந்தி என்று சொன்னா ...ி, அதற்குப் பொருள் ...துறந்த முனிவர் என்ப ...புரட்சி பல கண்ட ...ளத் தலைவன் என்பது ...தியாகம், தீரம், தைரி ...உறுதி, எதற்கும் 'ஈடு ...துப் போராடும் பெரு ...எவரையும் தன்பால் ...வசீகர சக்தி, எந் நிலை ...உண்மை நெறியிலிருந்து ...மை ஆகிய உயர் குணங் ...தனையும் ஒன்று திரண்டு ...வடுத்து வந்தாலனைய ...வாய்ந்த பெரு மகனார் அவர். மனித சமுதாயம் எனும் கலத்திற்கு ஓர் கலங்கரை விளக்கமாய், திக்குத் தெரியாத காட்டினில் தேம்பித் திரிந்திடும் மக்களுக்குக் கிடைத்தற் கரியதோர் வழிகாட்டியாய், சுற்றி நிறைந்திருந்த முகிற் கூட்டத்தைக் கிழித் தெறிந்துகொண்டு வெளியேறிய வெண்ணிலவாய் விளங்கினார், மறைந்த அம் மாவீரர்.

அவருடைய உள்ளம் ஓர் அன்பு நிலையம். அவருடைய பேச்சு பசுந் தமிழில் பச்சை அன்பைப் பிழிந்தெடுத்த பாங்குடையது. அவருடைய எழுத்து ஆழ்ந்த சிந்தனைகளின் அடுக்கடுக்கான அலை மோதுதல். அந்த எழுத்தும் பேச்சும், அவற்றை உலகிற்கு அளித்து வந்த அந்த உள்ளமும் உணர்வும் நாற்பது கோடி மக்களின் நெஞ்ச ஏட்டிலே என்றும் அழியாததோர் அரக்கு முத்திரையைப் பொறித்துவிட்டன. அந்த முத்திரையை ஆயிரம் ஆண்டு எனும் காலக் கள்ளனும் பறித்தெடுக்க முடியாது. அவ்வளவு ஆழமாக, அவ்வளவு அழுத்தமாக, அவ்வளவு செம்மையாக, அந்த முத்திரை பதிந்துவிட்டது. அதை யார் அழிக்க முடியும்? எப்படி அழிக்க முடியும்? நாதுராம் விநாயக் கோட்சுகள், மத வெறி பிடித்த மமதையாளர்கள், பாலைவன நெஞ்சு படைத்த மா பாதகர்கள் வெறும் துப்பாக்கி வேட்டுகளைக் கொண்டு அதை அழித்துவிட எண்ணலாம். ஆனால் அது ஆகிற காரியமா?

காந்தியார், உலகைத் திருத்த வந்த உத்தமர். புத்தர் பொன்மொழியை, ஜீனர் எண்ணத்தை, ஏசுவின் கருத்தை, மீண்டும் உலகிற்கு உணர்த்தவந்த குணக்குன்று. பலாத்காரம் எனும் அழிவுப் பாதையிலே வெகு வேகமாகச் செல்லும் மனிதக் கூட்டத்திற்கு சாந்தியும் சமாதானமும் நிரம்பிய அன்பு மார்க்

கத்தை எடுத்துச் காட்டிய புதிய பேரொளி.

அந்த ஒளியின் சிறப்புப் பற்றிய சில கருத்துரைகள் இங்கு உள்ளன—உங்கள் சிந்தனையுடன் உறவாட.

உறவாட விடுங்கள்.

* * *

## மனத்துக்கு அமுதம்

காந்தியடிகள், குணமலை. கொல்லாமை அவரது நோன்பு; பொறுமை அவர் அணிகலன்; தியாகம் அவர் செல்வம். பிறர்க் குழைத்தல் அவர் தொண்டு. தம் பெருமை தாம் உணராதிருப்பது அவர் பெருமை. அவரது வெள்ளிய ஒற்றைக் கலையும், அழகிய சிறிய உடலும், என்றும் நீங்காப புன்முறுவலும், அகன்ற ஆவின் செவியும், கண்ணோட்டமும், எவ்வுயிரும் தம்முயிர் என்று கருதி இரங்கும் நெஞ்சமும் மனத்துக்கு அமுதமாகும். அவரது போதனையினாலும் சாதனையினாலும் உலகிடை மாறுதல் உற்றவருங் குறிகள் தோன்றி வருகின்றன. அம் மாறுதலால் புது உலகம் மலரும் என்று கருதப்படுகிறது.

—திரு. வி. க.

## உயிர் ஒளி மறைந்தது!

நம் வாழ்க்கையின் உள்ளொளி அணைந்துவிட்டது; எங்கணும் பேரிருள் சூழ்ந்துவிட்டது. உங்களுக்கு என்ன சொல்வது என்பதும் அதை எப்படிச் சொல்வது என்பதும் எனக்கு விளங்கவில்லை. நம்முடைய அருமைத் தலைவர், பாபு என்று நாம் அன்போடு அழைத்துவந்த தலைவர், நாட்டின் தந்தையார் மறைந்துவிட்டார். இவ்வாறு நான் கூறுவது ஒருக்கால் தவறாயிருக்கலாம். ஆனாலும் இவ்வளவு ஆண்டுகளாகப் பார்த்துவந்ததுபோல் இனி நாம் அவரைப் பார்க்கமுடியாது. இனி ஆலோசனை கேட்பதற்காக அவரிடம் நாம் ஓடமுடியாது. அவரிடமிருந்து மனச் சாந்தி பெறமுடியாது. இது எனக்கு மட்டுமே ஏற்பட்ட இடியல்ல; இந் நாட்டில் உள்ள இலட்சக் கணக்கான மக்களுக்கும் நேர்ந்த பேரிடி ஆகும். இந்த இடியை நானோ, மற்ற எவருமோ கூறும் அறிவுரையைக் கொண்டு சாந்தப் படுத்திக் கொள்வதென்பது மிக மிகக் கஷ்டமானதுதான்.

ஒளி மறைந்துவிட்டதாக நான் கூறினேன். நான் அப்படிக் கூறினதும் சரியல்ல. இந்தியாவில் எங்கும் தன் சுடர்களைப் பரப்பிக்கொண்டிருக்கும் இந்த ஒளி சாதாரண ஒளியல்ல. நம் நாட்டிற்குப் பல்லாண்டுகளாக வழிகாட்டிவந்த இவ் ஒளி இனிவரும் எத்தனையோ ஆண்டுகளிலும் வழிகாட்டியே தீரும். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் கூட இந்த ஒளி வீசிக்கொண்டுதான் இருக்கும். உலக மக்கள் அதைப் பார்த்துக்கொண்டுதான் இருப்பார்கள். துக்கத்தில் தோய்ந்திருக்கும் எண்ணற்ற இருதயங்களுக்கு அது ஆறுதல் அளித்துக்கொண்டுதான் இருக்கும்.

—பண்டித நேரு.

## புது முறை வகுத்த இலட்சிய புருஷர்

மோகன்தாஸ் காந்தி, எத்தகைய வெளி அதிகாரத்தின் தலையீடுமின்றி மக்களாலேயே போற்றப்படும் ஓர் மக்கள் தலைவர்; சட்ட நுணுக்கங்களின் திறம் அறிந்ததாலோ, வஞ்சம் சூழ்ச்சி களவு முதலிய வழித் துறைகளில் தேர்ந்ததாலோ அல்லாமல், மக்களைத் தன்பால் ஈர்க்கும் வசீகர சக்தி ஒன்றினாலேயே வெற்றிபுரிக்குச் செல்லும் அரசியல்வாதி; பலாத்கார

முறைகளைக் கையாள்
என்றுமே வெறுத்து ஒ
வந்திருக்கும் சிறந்த போர்
உறுதியும் ஊக்கமும் பை
அறிவின் செல்வர்; ஐரோ
வின் மிருகத்தனமான
தையை தன்னுடைய எளிய
த் தன்மை என்ற கருவி
ண்டே வெட்டி வீழ்த்திய

அரசியல் வரலாற்றி
காந்திக்கு ஓர் சிறப்பான
உண்டு. அடக்கி ஒடுக்கி
டப்பட்டுவரும் மக்களின்
லைப் போராட்டத்தை நட
தற்காக முற்றிலும் ஓர் பு
மனித இயற்கைக்கு ஒத்த
முறையைக் கண்டுபிடித்
அவரே. தக்க போராற்ற
அதை நடைமுறையில்
யாண்டு வெற்றி பெற்ற
அவரே. சிந்திக்கும்
படைத்த மக்கள் உள்ள
எல்லாம் அவர் கிண்டி
உணர்ச்சி வேகம்,
பலாத்காரத்தையே நம்பிக்
கும் இன்றைய உலகத்தின்
களில் அவ்வளவு பெ
தோன்றாது என்பது உ
தான். ஆனால் அந்த உ
நெடுங்காலத்திற்கு நிலைத்
கும் என்பதில் சிறிதும்
மில்லை.

இத்தகைய இலட்சிய பு
ஒருவர் இந்த உலகத்தில்
காலத்தில் உண்மையாகவே
ருடன் உலவினார் என்
நமக்குப் பின் வர இரு
மனித சந்ததிகள் நம்
மாட்டார்கள் என்று
எண்ணுகிறேன்.

—பிரபல விஞ்ஞானி
ஈன்ஸ்

## அனைவர் நெஞ்சிலும் நிறைந்தவர்

அவருடைய உயர்ந்த
தும், நிறைந்த மனிதத்வ
மும் உலகம் முழுவதும்

தாபிமானிகள் எல்லா
ய உள்ளத்தையும் கவர்ந்
ட்டன.

—அப்டன் சிங்ளேர்.

## திக்கு நன்றி

ித உள்ளம் முற்றிலும்
மை நிறைந்ததாய் இருக்க
ம் என்பதில் இந்தியா
இருக்கும் ஆழமான நம்
இன்னும் மறையவில்லை
தை எடுத்துக்காட்ட இந்தி
கு ஒரு வாய்ப்பினை
்த காந்தியாருக்கு நாம்
ம் கடமைப்பட் டிருக்கி

—கவிஞர் தாகூர்.

## ய போன்றவர்

ந்தியார், சிறிய உருவமுள்
உடல் வன்மை இல்லா
அவருடைய கண்கள்
டு சாந்த மயமாயிருக்
காதுகள் பரந்து விரிந்தி
ம்; அவர் இடுப்பிலே கட்
வேட்டி வெள்ளையான
டுத் துணி; தரையிலே
அவர் படுத்துறங்குவார்;
நெடுநேரம் தூங்குவ
சிறிது பொழுதே தூங்
; சளைக்காது வேலை செய்
சுருங்கச் சொன்னால்
ஓர் ஏழை; பராரி;

ல் இந்த மனிதர்தான்
கோடி இந்தியரை உறக்
ருந்து தட்டி எழுப்பிய
பிரிட்டிஷ் ஏகாதிபத்தி
ஆட்டிக் குலுக்கிவிட்ட
சென்ற இரண்டாயிரம்
ளாக இவ் வுலகில் என்
ருந்திராத புதிய சக்தியை
சமுதாயத்தில் மூட்டி
ர்; இந்தப் பரந்த உல
அரசியல் இயக்கங்க
த்தகைய நீதியான முறை
ண்டு பண்ணிய முதல்

ஏசுநாதரும் அவரும் ஒருவரே. ஏசு சிலுவையில் அறையப்பட்டார், காந்தி சிலுவையில் அறையப்படவில்லை. இது தான் இருவருக்கும் உள்ள வேறுபாடு.

காந்தியார், எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பிறகும் மக்களால் மறக்க முடியாத அளவு மாண்பு படைத்த இந்தியாவின் தேசியத் தலைவர் என்பதை மட்டுமல்ல; தூங்கிக் கிடந்த இந்திய சமுதாயத்தைத் தட்டி எழுப்பி அதனுடைய சக்தியை, திறமையை, ஒற்றுமையின் விளைவை, சுதந்தரத்தின் சிறப்பை அதற்குத் தெள்ளத் தெளிய உணர்த்திய புது மனிதர் என்பதை மட்டுமல்ல; ஏசு கிறிஸ்துவின் உயர்ந்த தத்துவங்களை மறந்துபோயிருக்கும் அல்லது புறக்கணித்துவிட்டிருக்கும் மேற்கு நாட்டினர் எல்லோருக்கும் அந்தத் தத்துவங்களை மீண்டும் எடுத்துக்காட்டும் துணிவும் தீரமும் படைத்தவர் என்பதைத் தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அவர், மனித சமுதாயத்தை உயர்த்தவந்த உத்தமர்களின் பட்டியலில் தன் பெயரைப் பொறித்துவிட்டார். இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் அவருடைய புத்தொளி பரவிவிட்டது.

—ரொமேன் ரோலந்து.

## செயற்கரிய செய்த செம்மல்

அவருடைய வாழ்க்கை வரலாறு—மிக உயர்ந்த பொருளில் சொல்கிறேன்——வீரம் செறிந்தது. தன்னுடைய சூழ்நிலையின் இயற்கையையே எதிர்த்துப் போராடி, அந்தப் போராட்டத்தில் கிட்டத்தட்ட முழு வெற்றி பெற்றுவிட்டார் அவர்.

திடமான உறுதி படைத்த ஒரு சிறு ஒற்றை நாடி மனிதர்—கோவணத் துண்டு ஒன்றையே அரையில் ஆடையாகக் கொண்டவர்—112 பவுண்டுகள் கூட எடை இல்லாதவர், உலகம் இதற்குமுன் எந்நாளும் கண்டிராத மிகப் பெரிய ஏகாதிபத்தியத்தையே அசைத்துவிட்டார். மனித பலத்திலோ, திரண்ட பொருள் வளத்திலோ, பரம்பரைப் பெருமையிலோ, நாடாளும் திறமையிலோ, சூழ்ச்சி முறையிலோ எதிலும் சளைக்காத ஒரு வல்லரசை உலுக்கிக் குலுக்கி அநேகமாக வீழ்த்தியே விட்டார். அவர் விதியுடன் போராடினார்; "விதி"யை விடப் பலம் பொருந்தியதாகக் காணப்பட்ட பிரிட்டிஷ் வல்லரசுடன் போராடினார்.

மக்கள் உள்ளத்தைத் தன்பால் இழுப்பதிலே அவர்க்கிருந்த அந்த "மாயா சக்தி" உண்மையிலே நமக்குத் திகைப்புண்டாக்குகிறது.

புரட்சிவாதியோ, அல்லவோ, இந்தியாவின் உருவத்தை அவர் மாற்றி விட்டார்; தன் தோள் வன்மையில் நம்பிக்கை இழந்து, தாழ்ந்து கிடந்த சமுதாயத்திற்கு உயிரும் உணர்வும் ஊட்டிவிட்டார்; பாமர மக்கள் கூட்டத்தில் தம்மையே தாம் எண்ணிப் பார்க்கும் தைரியத்தை ஊன்றிவிட்டார்; இந்தியப் பிரச்சினையை உலகப் பிரச்சினையாகவே உயர்த்திவிட்டார்.

எவ்வளவு ஜொலிப்பு நிறைந்த அதிசயமான வாழ்க்கை அவருடையது! அவருடைய அற்புதமான சாதனை, இந்திய மக்களிடையே ஒரு புதிய உத்வேகத்தை, புத்துணர்ச்சியை, புது ஒற்றுமையை உண்டாக்கிக் காட்டினரே அதுதான்.

—ஜான் கந்தர்.

(13-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

7—2—48 சனிக்கிழமை

# மறைந்தது ஞாயிறு

மறைந்தது ஞாயிறு. அழிந்தது முழு நிலா. அணைந்தது விளக்கு. அவிந்தது பேரொளி. சூழ்ந்தது காரிருள்; சூழ்ந்தது காரிருள்.

திராவிடம் இருண்டுவிட்டது. இந்தியா இருண்டு விட்டது. உலகம் இருண்டுவிட்டது. மாந்தர் உள்ளம் இருண்டுவிட்டது. மனித சமுதாயத்தின் பரந்த வாழ்க்கையில் இருள் மேகங்கள் கவிந்துவிட்டன. சாந்தியும் சமாதானமும் அன்பும் அமைதியும் ஓங்கவேண்டும் என்ற எண்ணம் படைத்தார் உள்ளமெல்லாம் பொலிவிழந்து விட்டன. பொச்சரிப்பும் பூசலும் குறைய வேண்டும்—பொல்லாங்கு செய்வார் தொகை சுருங்கவேண்டும்—போரும் பிணக்கும் மறையவேண்டும்—சுரண்டலும் சூழ்ச்சியும் தொலைய வேண்டும்—சமுதாயத்திற்கு சமுதாயம், மதத்திற்கு மதம், இனத்திற்கு இனம், நாட்டிற்கு நாடு இவற்றின் இடையே எழுகின்ற போர் மேகங்கள் சுருங்கிச் சிதைந்து தேய்ந்து மாய வேண்டும் என்ற நல்லெண்ணமும் நம்பிக்கையும் அரசோச்சிய இடமெல்லாம் துயாக்கடல் பாய்ந்து விட்டது. அங்கெல்லாம் சோகமும் சோர்வும் நிறைந்துவிட்டன. அழுகுரலும் சாவொலியும் எழுந்துவிட்டன. கண்ணீரும் கம்பலையும் மிகுந்துவிட்டன. விம்மலும் வேதனையும் பெருகிவிட்டன. சொல்லுக்கு அடங்காத துக்கம்—கட்டுக்கு அடங்காத நெஞ்சக் குமுறல்—நினைத்தாலே நெஞ்சு, நடுங்கும் திகைப்பு—ஒரு கணம் சிந்தித்தால் உள்ளத்தை உன்மத்தமாக்கும் சோக சம்பவத்தின் சாயல் எங்கெங்கும் பரவிவிட்டன.

இந்து மத வெறி பிடித்த—மனித உருதாங்கிய விலங்கொன்றின் கரத்திலிருந்து பிறந்தெழுந்த துப்பாக்கி வேட்டின் எதிரொலி கேளாத இடமில்லை. அந்தோ இது கொடிது கொடிது என்று சொல்லிச் சொல்லி வருந்தி யழாத மக்களில்லை. பாபுவையா கொன்றான்—குழந்தைக்கும் குழந்தையாய் வாழ்ந்த உத்தமனையா கொன்றான் என்று கூவிக் கதறிச் சோர்ந்து வீழாத மனித சமுதாயம் இல்லை. உலகிற்கே ஓர் ஒளி விளக்காய் விளங்கிய காந்தி மன்னனையா மாளச் செய்தான் ஓர் பாவி என்னும் அவலக் குரல் எழாத நாடில்லை.

மக்கள் இனத்தின் மனச்சான்று எனத்தகும் பெற்றி வாய்ந்த பெம்மானைச் சுட்டு
வீழ்த்தும் சுடுநெஞ்சன்
பிறந்த மண்ணிலேயே
வும் செய்தானே பா
என்று பதறிப் பதறி
துடிக்காத சாதியோ இ
மக்கட் குழுவோ உலகி
கும் இல்லை. குமரி
லிருந்து இமயத்தின்
வரையில், ஆஸ்திரேலியா
டத்திலிருந்து ஆப்பிரிக்க
கள் வரையில், சீனநாட்டு
சி-கியாங் ஆற்றோரத்தில்
ஐரோப்பாவில் இடை
பாயும் ரைன் நதி வ
இலண்டனைச் சுற்றி
தேம்ஸிலிருந்து, எகிப்து
கெய்ரோ வரையில், து
கிலே உள்ள இந்தோ
வில், அதற்கு அருகே
இந்தோ சைனாவில், த
தில், பர்மாவில், வாஷிங்
மாஸ்கோவில், எஸ்கிமோ
வாழும் இடைவெளியில்,
பியாவில், ஆப்கனிஸ்
எந்த இடத்திலேதான் கா
ரின் மறைவு மாற்றமு
பெருந் துயரத்தை, மன
னையை, ஏற்படுத்தாது
விட்டது? நீதிக்கும் நே
கும் கட்டுப்படும் பண்பு
வும் இல்லாத மனித உ
கள் தவிர, வேறு எவ
இச் செய்தி கேட்டபின்
ந்து, கண்ணீர் மல்கி,
மனஞ் சுருங்காது இரு
யும்?

நாளும் நாளும் இன்
களை வீசிக்கொண்டு, ம
கிடையே ஒற்றுமை
உயர்வை போதித்துக்
நாட்டிலே மூண்டெழு
நிகழ்ச்சிகளை நசுக்கிக்
மதமெனும் பேய்பிடித்
தமை மறந்து உடன்
நாட்டாரைக் கொன்று
ரையும் நல்வழிப் ப
கொண்டு, ஊருக்கு ஊர்
தேசம் புரிந்துகொண்
டிலே, அமைதியின் சின்

சாமையின் உருவமாய், கத்தின் சிகரமாய், உண்மை ம் உயர்பொருளின் நடமா உருவமாய், மனித இருத ன் மாண்பிற்கு ஓர் மகத் எடுத்துக்காட்டாய் விளங் மோகன் தாஸ் கரம் சந்த் , ஜனவரி 30 ல், நாதுராம் க் கோட்ஸே எனும் ஓர் த்திப் பார்ப்பனனின்— ப்பனா அவன், அல்ல, ப்பன உரு தாங்கிய பாத பழிகாரன், மனித சமுதா ன் இருதயத்திலேயே பாய்ச்சிடும் அளவுக்கு ளத்தைக் கல்லாக்கிக் ண்ட கயவன், கொடியவன் த்தகையானின் துப்பாக்கி டுகள் நான்கு பாய்ந்து ந்தார், மறைக்கப்பட்டார், வெறிக்குப் பலியானார், தன் லின் விளைவறிய மாட்டாத ன் ஒருவனின் வெறிச் லால் மண்ணிலே சாய்ந் மாண்டுபோனார். இச் தி காட்டுத் தீயெனப் பர பாது, கொடுமையினும் மையான இக்கொடிய நஞ் நாளிதழ்களும் வானொலி கானிலமெங்கும் பரப்பிய து, இச் சேதி காற்றிலே து கலந்து மக்கள் இதயத் தாக்கியபோது எவ்வளவு ம் தோய்ந்த நெஞ்சினரா உலக மக்கள்! கங்கையி யமுனையிலும் காவிரியிலும் ணையிலும் மட்டுமா கண் தண்ணீருடன் கலந்து ஓடிற்று. இல்லையே! , எல்ப், நைல், வோல்கா, ங்ஹோ, மர்ரே, டார்லிங், மிஸ்ஸிபி, மிஸ்ஸௌரி, கா, அமேசான், ஓரி என்று உலகெங்கும் ஆறுகள் அத்தனையிலும் காட்சிதானே! இந்தியக் த்தில் குஜராத்திப் பகுதி கத்தியவார் எனும் ஒரு ல் போர்பந்தர் திவா னுக்கு மகனாய்ப் பிறந்த ஒரு மெல்லிய மனிதர்—எண்பதாண்டுக் கிழவர்—வாழ்க்கை எல்லையின் கடைக்கோடியில் வாழ்ந்து வந்தவர் மறைந்துவிட்டார் என்ற சேதி கேட்டு உலகமே குமுறிற்று என்றால், இதுவே அவர் மாட்சிக்கு ஓர் சாட்சி அல்லவோ!

உலகில் இதுவரை எத்தனையோ மன்னாதி மன்னர்கள் மாண்டிருக்கின்றனர்; புத்துலகச் சிற்பிகள் மறைந்திருக்கின்றனர்; சமுதாயத்தைத் திருத்த வந்த தீரர்கள் இயற்கை எய்தி இருக்கின்றனர். அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், தியாகிகள், தலைவர்கள், தளபதிகள், விஞ்ஞானிகள், தொழில்துறை மன்னர்கள் இறந்துபோய் இருக்கின்றனர். அவருள் பலர் கோர முடிவு எய்தி இருக்கின்றனர். பலர் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கின்றனர். பலர் குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். பலர் பகைவர்தம் வாள் வீச்சுக்கும் குண்டு வீச்சுக்கும் இரையாகி இருக்கின்றனர். பலர் போர்க்களத்தில் போராடிய வண்ணமே வீர மரணத்தைத் தழுவியும் இருக்கின்றனர். பலர் நெடுந் தூக்கத்தில் ஆழ்ந்துகிடந்த தத்தம் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி முன்னேற்றப் பாதையில் நடத்திச் சென்று தாம் கனவு கண்டுகொண்டிருந்த இலட்சிய பூமிக்கு வெகு அருகில் வந்துவிட்ட போது எவரேனும் வெறியரின் போர்வாளிலோ கரத்திலோ துப்பாக்கியிலோ சிக்கிச் சிதைந்து போயும் இருக்கின்றனர். ஆனால் அவர் அனைவர் மரணத்திற்கும் ஒவ்வொரு குழுவினரே—ஒவ்வொரு நாட்டினரே—ஒவ்வொரு சமுதாயத்தினரே—ஒவ்வொரு மதத்தினரே வருந்தி இருப்பர். ஆனால் காந்தியார் மரணமோ, நாடு—இனம்—சாதி—மதம்—சமயம்—கட்சி—கொள்கை வேறுபாடு—அரசியல் சிக்கல் — பொருளியல் வேற்றுமை எனும் அத்தனை சுற்றுச் சுவர்களையும் ஊடுருவிப் பாய்ந்து எங்கெங்கும் உள்ள மக்களையெல்லாம் ஒன்றுபோல் தாக்கி இருக்கிறது. இது மனித வரலாறு கண்டறியாத புதுமை.

என்ன காரணம் இப் புதுமைக்கு? ஏன் உலகம் முழுதும் தேம்பித் தேம்பி அழுகிறது இவர்தம் மறைவுகண்டு? ஜெம்ஷட்பூரில் ஒரு தொழிலாளி, விஜயநகரம் கல்லூரித் தலைவர், பங்களூருக்கருகே அருளானந்தர் என்பார் ஒருவர்—இவர்கள் எல்லாம் காந்தியாரின் மரணச் சேதி கேட்டதும் அந்த விநாடியே மாண்டு போயினராமே, எதனால் இங்ஙனம் நிகழ்ந்தது? காந்தியாரின் மறைவு மட்டும் மக்கள் உள்ளத்தில் வேறு எந்த துயர்மிகு நிகழ்ச்சிக்கும் இல்லாத அளவுக்கு வேதனைப் புயலை எழுப்புவானேன்? அறிஞர் பெர்னர்ட்ஷா உரைத்த ஓர் வாசகம் இந்தக் கேள்விகட்கெல்லாம் சுருக்கமான ஆனால் உண்மையான விடையை அருமையான முறையில் சுட்டிக் காட்டுகிறது. ஷா கூறினார்: " **காந்தியார் அளவுக்கு மீறி நல்லவராய் இருந்தார்.**"

ஆம், அதுதான் காரணம். காந்தியார் அடைந்த முடிவு இந்தப் பூமண்டலத்தின் வட துருவத்திலிருந்து தென் துருவம் வரை உள்ள இடைவெளியை எல்லாம் கண்ணீர் வெள்ளத்தில் நீராட்டியதற்கு மட்டுமல்ல, வெவ்வேறு நாட்டில், வெவ்வேறு சூழ்நிலையில், வெவ்வேறு தன்மையில், வெவ்வேறு கொள்கைச் சிறப்பில், வாழும் மக்கள் எல்லாம் ஒத்த துக்கம் எனும் ஒரு முனையில் ஒன்று சேர்ந்து நிற்க நேர்ந்த வியத்தகு காட்சிக்கு மட்டுமல்ல, இவ்வு

ளவு பெரிய அவமானத்தை வலிய ஏற்கின்றோமே நம் உடலில் என்ற எண்ணம் துளியும்



மாணவர் காந்தி

இன்றி மகாத்மாவை மண்ணிலே சாய்த்தானே மாபாதகன், அவனுக்கு இந்தத் துரோகச் சிந்தனை நெஞ்சிலே அரும்பியதற்கேகூட காரணம் அவர், அளவுக்கு மீறி நல்லவராய் இருந்தார் என்பது தான்.

மதவெறி எனும் பலிபீடத்தில் இந்துக்களும இஸ்லாமியரும் சாய்ந்தனர்—வடநாட்டில். சாய்ந்தனர் என்பது மட்டுமல்ல, ஒருவரை ஒருவர் சாய்த்துக் கொண்டனர் ஒருவரை ஒருவர் மட்டுமா! அவர்கள், தம் வெறிச் செயலின் மூலம் இந்தியாவின் நல்ல பெயரையே சாய்த்து விட்டனர். இந்துக்கள் என்று கண்டதும் அவர்களை இஸ்லாமியர் வெட்டி வீழ்த்துவதும் இஸ்லாமியர் என்று தெரிந்ததும் அவர்கள் மீது இந்துக்கள் வாள் ஓச்சுவதும் நித்திய நிகழ்ச்சிகள் ஆயின வடஇந்தியாவில். இந்தியர்க்கும் ஆட்சியோ, அவர்கட்கு ஆள்வதற்கும் தெரியுமோ என்று பரம்பரை பரம்பரையா

கக் கேலிக்குரல் எழுப்பி வந்த சர்ச்சில்கள் இதுகண்டு கைகொட்டி நகைக்கலாயினர். இந்நிலை கண்டு உள்ளம் வெதும்பினார் உத்தமர் காந்தியார். "இதுவோ விடுதலை சகாப்தம்—இதைக் காண்பதற்கோ என் ஆயுள் எல்லாம் அழிந்து மறைந்தது!" என்று கண்ணில் பெருக்கினார் நீர் அருவி. மறுபடியும் மறுபடியும், இந்திய அரசியல் வானிலே



பாரிஸ்டர் காந்தி

வட்டமிடும் நவாகலி மேகங்கள், அந்த வானத்தின் நல்லழகையே நசித்து நாசமாக்கக் கண்டு உள்ளம் குமுறினார். இந்துக்களே, இஸ்லாமியர் என் செயினும் நீவிர் பழிக்குப் பழி வாங்குவது கூடாது—ஆகாது என்று பேசினார். இந்தியப் பகுதியில் உள்ள இஸ்லாமியர்க்கு நேரிடும் ஊறு தனைக்களைய உண்ணா விரதமும் இருந்தார். அந்த உண்ணாவிரதம் இந்திய மண்ணுக்கு நேரிட்ட இழிசொல்லையும் இஸ்லாமியர் உயிருக்கு நேர்ந்த ஆபத்தையும் ஒருங்கே கல்லியெறிந்தது. கல்கத்தாவிலே, டில்லியிலே, பாஞ்சாலத்திலே, பாட்ணாவிலே, எங்கெங்கே இந்து—முஸ்லிம் மதவெறியின் கோரத்

தாண்டவம் நிகழ்ந்ததோ,
கெல்லாம் அவருடைய
முயற்சியின் பலனாக அ
தவழ்ந்தது. இஸ்லா
இந்தியாவினின்றும் தா
தீரவேண்டும் என்று முடி
விட்ட சில மதவெறியர்
இதைப் பொறுக்க
சூழ்ச்சி பல செய்தது.
சில வருத்தது. முடிவில்
சார்ந்த மன்னர்க்கெல்லா
டாத உயரத்தில்—மக்கள்
ளத்தில்—வீற்றிருந்த மு
மன்னவனை ஒரு பிடி ச
ஆக்கிற்று. இனி என்று
போம் இனிய அவர்
றத்தை என்று இந்தியா
அழ அழ அவர்தம் பூத
இவ்வுலகினின்று பெ



தலைவர் காந்தி

தெடுத்துவிட்டது. அள
மீறி நல்லவராய் இருந்தார்
தியார்—அது அவர் உயி
உலை வைத்துவிட்டது; அ
தான் உலகம் புகழும் உ

பெயரையும் அவர் காலடி
ாண்டு சேர்த்தது.
22 மார்ச் 18. ஆமதாபாத்
ன்ஸ் கோர்ட். ஏராளமான
ம். வழக்கு தொடங்க
கும் நேரம். நீதிபதி தன்
கையில் வீற்றிருக்கிறார்.
வாளி—ஒரு சிறு மனிதர்
கனப் புன்னகை தன்
லே ததும்ப மெள்ள
ந்தார். அவ்வளவுதான்.
த்தில் இருந்தோர் அனைவ
டுமென எழுந்து நின்று
ரியாதையைக் காட்டினர்.
வாளி, கூண்டிற்குச் சென்
அனைவர் கண்களும் அந்
ற உருவத்தின் மீதே
று தேங்கின. குற்றவாளி
தொடங்கினார்:—

ட்வகேட்—ஜெனரல் என்
த்திய குற்றங்கள் அத்தனை
ண்மையே என்பதை ஒப்
ள்கிறேன்.

ளரி சௌராவில் என்நாட்டு
வரம்பு கடந்தும் பலாத்கார
முறையிலும் நடத்திய சைத்
சேட்டைகளுக்கும் பெருங்
களுக்கும் நான் பொறுப்
அல்ல என்று சொல்வதற்கு
து என்பதையும் நான்
படையாக ஒப்புக் கொள்கி

பாதுள்ள அந்நிய ஆட்சி
அடியோடு ஒழியவேண்டும்
் கருத்தை நாட்டிலே பரப்
என்னுடைய இயற்கை
போய்விட்டது என்பதையும்
றைக்கப் போவதில்லை.

றுப்புள்ள ஒரு மனிதர்—
றிவு படைத்தவர்—ஓரளவு
அநுபவமும் படைத்தவர்
முறையில் நான் என் எழுத்
எத்தகைய விபரீத விளைவு
ரக்கூடும் என்பதை எண்
பார்த்திருக்க வேண்டும்
அட்வகேட் ஜெனரல் கூறி
றிலும் சரி; நான் அவற்றை
ப் பாராமல் இல்லை. பார்த்
நான் நெருப்புடன் விளை
றன் என்பதையும்
தேன். ஆனால் விபரீத
ள் நேரிடக் கூடுமே என்
் என் கடமையிலிருந்து
ற விரும்பவில்லை. ஆகவே நான் அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்து என் மக்களைத் தட்டி எழுப்பினேன். என்னை இப்போது விடுதலை செய்து விட்டால் மறுபடியும் அதையேதான் செய்வேன்.

சௌரி சௌராவிலும் பம்பாயிலும் சென்னையிலும் என் மக்கள் நடத்திய கொடுமைகளுக்காக நான் மிக வருந்துகிறேன். அதற்கு உரிய தண்டனையை ஏற்றுக் கொள்ள நான்முற்றிலும் தயாராய் உள்ளேன்.

"நான் தங்கள் கருணையை வேண்டவில்லை. மன்னிப்புக் கேட்கவில்லை. சட்டத்தைத் தளர்த்த வேண்டும் என்று விழைகிறேனில்லை.

"நான் செய்திருப்பது ஓர் இந்தியன் என்ற முறையில் என் கடமையே என்றாலும் தற்போதுள்ள சட்டப்படி அது பெருங் குற்றம் என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன். ஆகையால் சட்டப்படி எவ்வளவு அதிகப்படியாக என்னைத் தண்டிக்க முடியுமோ அப்படித் தண்டியுங்கள்"

குற்றவாளி முடித்தார். நீதிபதி தொடங்கினார்:

"நான் இதுவரையில் விசாரித்த-இனி விசாரிக்கக்கூடிய எந்தக் குற்றவாளியையும் விட வேறான ஒரு தனிச் சிறப்புடன் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை நான் மறப்பது இயலாது.

"கோடிக்கணக்கான இந்தியர் உள்ளத்தில் நீங்கள் ஒரு பெரிய தலைவராகவும் தியாகத்தின் சின்னமாகவும் குடிகொண்டிருக்கிறீர்கள் என்பதையும் நான் நன்றாக அறிகிறேன்.

"அரசியல் துறையில் உங்களுடன் வேறுபடுபவர்களும் கூட தங்களை ஒரு சிறந்த ஞானியாகவும் இலட்சியவாதியாகவும் மதிக்கிறார்கள் என்பதையும் நான் உணராமல் இல்லை.

"ஆனால் இப்போது சட்டப்படி நடக்க வேண்டிய ஒருவர், அவருடைய வாய்மொழிப்படியே, சட்டத்தை மீறிவிட்டார் என்ற அளவில்தான் நான் உங்களைக்கவனிக்க வேண்டிய நிலையில் உள்ளேன். ஆகவே நான் உங்களுக்கு ஆறு ஆண்டு சிறை வாழ்க்கைத் தண்டனை விதிக்கிறேன்.

"ஆனால் எந்தக் காரணத்தாலாவது, இந்திய அரசியல் சூழ்நிலை மாறி அரசியலார் உங்கள் தண்டனைக் காலத்தைக் குறைத்து உங்களை விடுவிப்பின் என்னை விட மகிழ்ச்சியடைபவர் வேறு எவரும் இரார்."

வழக்கு முடிந்தது—விசித்திரமான வழக்கு! குற்றவாளி தண்டனையை விழைகிறார். நீதிபதிக்குத் தண்டிக்க மனமில்லை. இப்படி ஓர் வழக்கு—பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்! 1922-ல்! என்ன அருமையான நிகழ்ச்சி! நீதிபதி, புரூம்பீல்ட் என்னும் ஓர் வெள்ளையர். குற்றவாளி வேறுயாருமில்லை, மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி!

அத்தகைய அஞ்சாத நெஞ்சினரைத்தான் நாம் இழந்துவிட்டோம். வெள்ளை நீதிபதி, அவரை, சட்டப்படி அவர் செய்த குற்றத்திற்குத் தண்டிக்கவே உள்ளம் குமுறினார். ஆனால் இதோ ஓர் இந்தியன்—மராட்டியன்—"பூதேவர்" குலத்திலே பிறந்தவன்—விநாயக் கோட்சே அவரைச் சுட்டு வீழ்த்திவிட்டான். வழிபாட்டு மேடைக்கு வெகு அருகே வந்துவிட்டார் காந்தியார். கிட்டே சென்றான் பாதகன். வணங்கினான். நீங்கள் பிரார்த்தனைக்கு இன்று நேரங் கழித்து வந்துவிட்டீர்களே என்று வஞ்சக மொழி வீசினான். அவர் புன்முறுவல் பூத்த முகத்துடனே ஆமாம் என்று கூறினார். கூறி முடித்த மறுகணம் அவர் தரையிலே சுருண்டு கிடந்தார். இவனுடைய துப்பாக்கி வேட்டு அந்த உலகத் தலைவரைக் கீழே சாய்த்துவிட்டது. மதவெறியன் கொடுஞ்செயல் கிடைத்தற்கரிய மாணிக்கத்தை நம்மிடமிருந்து பறித்தெடுத்துவிட்டது.

இல்லை! பறித்தெடுக்கவில்லை! இதோ அவர் நம் உள்ளத்திலே இருக்கிறார். நம்மோடு உலவு

(13-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

என் உள்ளங் கவர்ந்த உத்தமர்

செழியனுக்கு,

உங்கள் வஞ்சி இதோ இன்னும் சில நிமிட நேரங்களில் நஞ்சுண்டு சாகப்போகிறாள். வஞ்சி தங்களுக்கு தன் உள்ளத்தையே தந்து விட்டாள் தங்களைக் கண்டதுமுதல். ஆனால் தாங்கள் அவளுக்குக் கொடுத்தது வெறும் கலை ஆர்வத்தை மட்டும்தான். நீங்கள் என்னை அன்புடன் பார்த்தபோதெல்லாம் அது காதல் பசியின் தோற்றம் என்றெண்ணினேன். சித்தம் களித்தேன். ஆனால் நீங்கள் என்னை எதிர்பார்த்ததெல்லாம் உங்கட்குக் கலையின் மேல் உள்ள காதலாலே ஒழிய என்மீது இருந்த ஆசையால் அல்ல என்பதை அண்மையில்தான் அறிந்தேன். அறிந்ததும் ஏதேதோ ஆகாயக் கோட்டைகளை எல்லாம் கட்டிவந்த என் உள்ளம் இடிந்து தூள்தூளாகிவிட்டது.

கலைக் கோட்டத்தில் உலவும் ஓர் சிந்தனைச் சிற்பி நீங்கள். நான் சாதாரண மனித உலகில் வாழ்பவள். இருவர்க்கும் இடையே தாண்ட முடியாததோர் ஆழமான, அகலமான பள்ளம் இருக்கிறது. இதை நான் அறியாதுபோனேன். அதன் விளைவு இதோ எனக்கு நானே சாவுக் கயிற்றை மாட்டிக் கொள்கிறேன்.

நீங்கள் கலைஞர். உங்களுக்குக் கலை உயிர். என் இன்ப உணர்ச்சிகளை நீங்கள் அறியவில்லை. ஒரு கன்னியின் காதலை நீங்கள் உணரவில்லை. அது உங்கள் குற்றமுமல்ல. நான் ஒரு கோழை. என் காதலை உங்களிடம் அன்றே நான் தெரிவித்திருக்கவேண்டும். தவறினேன். இன்று குற்றம் சாட்டுகிறேன் தங்களை ஒரு கொலைகாரர் என்று. என்ன நெஞ்சழுத்தம் எனக்கு!

உள்ளம் வெதும்பிய நிலையில் ஏதேதோ எழுதிவிட்டேன். மன்னியுங்கள். மன்னியுங்கள்.

செத்துக் கொண்டிருக்கும் வஞ்சி தன் கடைசிவணக்கத்தைத்தங்களிடம் தெரிவித்துக்கொள்கிறாள். இதையாவது ஏற்றுக்கொள்ளுங்கள்.

தங்கள் வஞ்சி.

கடிதத்தைப் படித்து, முடித்த செழியன் தலை நிமிர்ந்து பார்த்தான் எதிரே, நின்றிருந்த அவளுடைய தந்தையை. கண்ணீர் வடித்துக்கொண்டு, நிற்கும் அவரைக் கண் எடுத்துப் பார்க்கவும் அஞ்சினான். "வஞ்சியைக் கொன்றவன் நான்தான்"—இவை செழியன் கூறாத சொற்கள். அவன் கண்கள் சிந்திய சொற்கள். "அது அவள் விதி" என்று கூறிவிட்டு, வஞ்சியின் தந்தை சென்றுவிட்டார்—மிஞ்சிவிட்டதை மீட்டலரிது என்ற எண்ணங்கொண்டு.

* * *

எதிரே வஞ்சியின் சிலை. செழியன் சிரித்தான். "எனதுள்ளத்தை உங்களுக்காக ஒதுக்கியிருந்தேன். ஊ என உதறித் தள்ளினீர்கள். அந்த அலட்சியம், என்னைக் கொன்றுவிட்ட தன்பரே!" என்று கூறிற்று சிலை. காலை ஏதோ குத்திற்று, குனிந்து எடுத்தான். சுத்தி—உளி! அவை இரண்டும் இதுவரை எத்தனையோ சிற்பங்களைச் செதுக்கியிருக்கின்றன. ஆனால் இப்போது அவனது உள்ளத்தையே செதுக்கிச் சிதைத்தன. வாதையாற் துடித்தான். சுத்தியும் உளியும் பேசின: "எங்களைப் பெரிதென மதித்து, அந்தப் பொன் மேனியாளைப் புறக்கணித்தாயேடா! இனி நீ வாழ்ந்து எந்த வஞ்சியைக் கொல்லக் காத்திருக்கிறாயடா? கலை கலை என்று,
புரிந்த உனக்கு அதோ அந்த
கடலின் அழைப்பு காதில்
வில்லையா? எப்படியடா வி
வஞ்சியின் கண்கள் பே
ஆயிரங்கதைகள்! அந்தக் க
பேச்சே காதில் விழாதவ
அலைகடலின் அழைப்பு ம
கேட்கவாபோகிறது! செழி
சிற்பி! நீ ஒரு கொலைகாரன்!
காரன்!! கொலைகாரன்!!!"

* * *

செழியன் வஞ்சியின் சிலை
வாரித் தழுவினான். கல் இ
ளில் பொருத்தினான் தன் இ
நடந்தான்—நடந்தான்—நடந்
அலைகடலிற் பாய்ந்தான், தலை
தண்ணீர் மறைக்கிறது. அ
அணைப்பு பிரியவில்லை. கட
கருப்பு நிறத்திலே, அவன்
யின் கருப்புநிறம் கலந்தது. அ
லின் அலைகளுக்கடியில், செ
ளின் சிந்தனை அலைகள் சு
சுருண்டு ஓடின. ஓடிஓடி வீழ்
அந்த அலைகள் பேசி
அவை ஊமை அலைகள்!
மட்டுமென்ன! அவனும் ஊ
சிற்பிதானே!

---

# தாய்மொழிப் பற்று

காந்தியடிகள் கூர்ஜரத்தார். அவரது தா
மொழி கூர்ஜரம். அவருக்கு ஆங்கிலமும் தெ
யும். இந்தியும் தெரியும். அடிகள் நல்ல ஆங்கில
எழுதுகிறார் என்று ஆங்கிலத்தாராலேயே வியக்க
படுகிறது. இந்தி, இந்தியப் பொதுமொழியாத
வேண்டுமென்ற முயற்சி அடிகளாலேயே தொட
கப்பட்டது. அத்தகைய ஒருவர் தம் வரலாற்றை
எம் மொழியில் எழுதினர்? ஆங்கிலத்திலா? த
ழிலா? அவர் தமது வரலாற்றைத் தமது தா
மொழியாகிய கூர்ஜரத்திலேயே எழுதினார். அஃ
பின்னே மகாதேவ தேசாயால் ஆங்கிலத்தி
மொழி பெயர்க்கப்பட்டது. இஃது உணர்த்து
தென்னை? தாய்மொழியின் பற்றையும் இன்
யமையாமையையும் உணர்த்துகிறது.

திரு. வி. க.

# ...ண்டாமை—தமிழ்மொழி—தமிழர்.

...வெறியன் வேட்டுக்கு இரையாகி மறைந்தது காந்தியார் ...டல். ஆனால் அவருடைய ...ள்ளம்—அது என்றும் ...றையாது; மங்காது. ஏனெ...ில், இந்தத்துணைக்கண்டத்து ...க்கள் அனைவருடைய உள் ...த்திலே ஒரு உள்ளமாக ...ணையில் நாதம் போல, ...தன்றலில் குளிர்ச்சி போல, ...சந்தமிழில் இன்பம் போல ...து இரண்டறக் கலந்து விட் ...து. அந்த தியாகத்தந்தையின் ...ள்ளத்தின் உள்ளே ...சறிந்து கிடந்த சில கருத் ...ரைகள் இதோ உள்ளன. ...வை, உங்கள் சிந்தனைக்கு

## தீண்டாமை

...ண்டாமை என்பது ஹிந்து ...த்திலுள்ள ஒரு கறை. இவ் ...ப்பாரை இப்போது சாதி இந் ...கள் நடாத்தும் முறை சமய ...த்துக்கும் ஜீவ காருண்ய ...க்கத்துக்கும் மாறுபட்டதாகும். ...டாமை இந்து மதத்தின் பாற் ...தென்று சொல்லப் பட்டால் ...கைய இந்து மதம் எனக்குரிய ...து. தீண்டாமை இந்துமதத் ...உயிர் நாடியான கொள்கை ...று என் முன்னிலையில் உறு ...படுத்தப்படுமேல், இந்து மதத் ...யே எதிர்த்துப் புரட்சிக் கொடி ...த்த நான் தயங்க மாட்டேன். ...ல நன்மனமுடைய இந்துக் ...ம், தீண்டாமை இந்து மதத் ...ஒரு கூறு என்று கொண்டு, ...ருத்தக்காரரை மதத்திற்குப் ...பானவரென்று கருதுகின்றார் ... தீண்டாமை, இந்து மதத் ...ஒரு கூறாயின் என்னை இந்து ...று சொல்லிக்கொள்வதை ...து எனது இலட்சியத்தை ...வேற்றவல்ல வேறுசமயம் ...வன்.

...ண்டாமைக்கு இடம் தந்தமை ... இந்து மதம் பாவத்துக்கு ... தந்ததாகிறது. அப்பாவம் ...மயும்—முஸ்லிம் உள்ளிட்ட ... இந்தியரையும்—ஏகாதிபத் ...தில் பறையராக்கி இருந்தது.

... சகோதரர்களை ஒடுக்கிய ...ம் நம்பால் உண்டு. அவர் ...நாம் தரையில் ஊர்ந்து போகு... செய்கிறோம்; வண்டிகளில் ஏற ஒண்ணாதவாறு தள்ளுகிறோம். இவைகளை விடப் பிரிட்டிஷ் ஆட்சி என்ன கொடுமையைச் செய்தது? இவ்வாறு நாம் எளிய சகோதரர்களை ஒடுக்கும் பாவத்தில் மூழ்கியிருக்குமட்டும் நாம் விலங்குகளை விட மேலானவர்கள் அல்ல.

இவ்வூரில் (மாயவரம்) உள்ள பிராமணர்கள் ஹரி ஜனங்களைத் தம்மோடு உடன் ஒத்தவர்களாகக் கொள்ளும் அளவுக்குப் பரந்த மனப்பான்மை படைத்தவர்களாக இருக்கிறார்களா? அவர்கள் அப்படி இருந்து, மற்ற வகுப்பினர்கள் மட்டும் தீண்டாமையை விடாப் பிடியாய்க் கடைப்பிடித்து வருகிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்களா? ஒருவேளை அவர்கள், "தீண்டாதாருக்கு சம உரிமை தரநாங்கள் தயார். பிறவகுப்பினர் தாம் ஒப்பவில்லை என்று சொல்லுங்கூட நான் அவர்களை நம்பமாட்டேன். ஆனால், தங்கள் தவத்தாலும், பரிசுத்த தன்மையாலுமே தாங்கள் சமுதாயத்தில் உயர்நிலையில் இருப்பதாக அவர்கள் கருதுவார்களானால் நான் சொல்கிறேன், அச்சப் பிராமணர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் நிறைய இருக்கிறது அதுமட்டுமல்ல, அவர்களேதான் இந்த நாட்டை சபித்தவர்கள்; இந்த நாட்டை சீர்கேடு அடையச் செய்தவர்கள் என்பதும் உறுதியாய்விடும்.

## தமிழ் மொழி, தமிழர்.

தமிழ்மொழிப் பயிற்சியைப் பற்றி யான் ஒன்றுங் கூறுவதில்லையென்று சிலர் என்மீது பழிசுமத்துவதாகக் கேள்வியுற்றேன். அப்பழி என்னை அணுகாது. என்னை நன்கறிந்தவர் என்மீது அப்பழி சுமத்த ஒருப்படார். ஆங்கிலம் பயில்வதற்கு முன்னர் தமிழ்மொழி பயிலல் வேண்டுமென்று யான் பன்முறை பகர்ந்திருக்கிறேன். 1915-ம் ஆண்டிலேயே ஆங்கிலத்தினும் தமிழ் மொழியைச் சிறப்பாகக் கொள்ளுமாறு தமிழ் மக்களை வேண்டிக் கொண்டேன். இற்றைக்குப் பத்தாண்டுகட்கு முன்னர், இந்தியா முழுவதும் சுற்றிச் சுற்றி அயல்மொழி வாயிலாகப் பிள்ளைகட்குக் கல்வி புகட்டலாகாதென்று கிளர்ச்சிசெய்தேன். தாய்மொழியில் பேசுமாறும், தாய்மொழி நூல்களைப் பயிலுமாறும் மக்கட்கு விண்ணப்பஞ் செய்து கொண்டேன்.

திருக்குறள் நூலைப் பற்றிய சில செம்மொழிகள் உங்கள் வரவேற்பில் மிளிர்கின்றன. இருபது ஆண்டுகட்கு முன்னரே யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டுமென்று என்னுள்ளத்து எழுந்த அவாவேயாகும். **தமிழ் மொழியில் புலமை பெறுதற்குரிய ஓய்வு எனக்கு இல்லை. அது குறித்து யான் உறும் வருத்தத்திற்கோர் அளவில்லை.**

அவரவர் அவரவர்க்குரிய தாய்மொழி வாயிலாகவே கல்வி பெறல் வேண்டும். தமிழ் மக்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ் பயில வேண்டுவது அவர்களது இன்றியமையாக் கடமை. தமிழர் தம் மொழியை **ஆங்கிலம் முதலிய மொழிகளைவிட** முதன்மையாகக் கருதவேண்டும்.

-19?7-ல் தூத்துக்குடியில் பேசியது.

* * *

தென்னாப்பிரிக்காவில் யான் நிகழ்த்திய உரிமைப் போராட்டத்தில் தமிழ் மக்கள் புரிந்த துணையைப்போல வேறு எந்த இந்தியரும் புரியவில்லை. அவர்கட்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயிலவேண்டுமென்று நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழி பயில்வதில் மிக ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன்.

தமிழ் மனங் கவரும் ஓர் இனிய மொழி. தமிழ் மக்களில் பண்டை நாளிலும் இந்நாளிலும் பல அறிஞர் இருந்தனர்—இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறியக்கிடக்கிறது. **இந்தியாவில் ஓர் இனம் ஏற்பட வேண்டுமானால் சென்னை நகரத்துக்கு அப்புறம் உள்ளவரும் தமிழ் உணரல் வேண்டும்.**

தமிழ் மக்களை யான் காணும் போதெல்லாம், அவர்கள் எனது இரத்தக் கலப்புற்ற உடன் பிறந்தவர் போலத்தோன்றுகிறார்கள். எல்லா இந்திய மக்களினும் தமிழ் மக்களே பெரிதும் பொறுமைப் போரில் தலைப்பட்டுழைத்தார்கள். அப்போரில் இன்னுயிர் துறந்தவருள் பலர் தமிழர். சிறை சென்றவருள் பலர் தமிழர்.........

# ஊமைச் சிற்பி

உடுமலை ஜெயராஜ்

[சென்ற இதழின் தொடர்ச்சி]

"மணமற்ற மலர் நான். களையற்ற முகம் நான். கற்பனையற்ற கதாசிரியன் நான். மையற்ற பேனா நான்.

"மலர் நான். மணம் அவர். முகம் நான்——களையவர். கதாசிரியன் நான்—கற்பனை அவர். பேனா நான். மையவர்" என்றவள் கூறவில்லை...அவள் சிந்தனை கூறிற்று.

இது அவள். ஆனால் அவன்—?

அவன் எண்ணினான்: "கற்பனை யற்றிருந்த எனக்கு கட்டழகி கிடைத்தாள்—சிலையாகச் செதுக்க." அவள் அழகு அவனுக்கு வேறு எந்த எண்ணத்தையும் தர வில்லை. கற்பனைக்கு ஒருத்தி கிடைத்தாள்——இது தான் அவனுக்குத் தெரியும்.

அந்த அல்லிக்கொடி தோற்றம், அவனுக்கு அதைச் சிலையிலே காண வேண்டும் என்ற எண்ணத்தைத்தான் தந்ததே ஒழிய காதலைத் தூண்டவில்லை. அவளுடைய எடுப்பான மூக்கு, துடுக்கான பேச்சு, காவியக் கண்கள் இத்தனையும், செழியனை அவற்றைக் கருங்கல்லிலே காணத் தூண்டியதே ஒழிய காதல் அரங்கிலே, தங்கள் அன்பு நடனத்தை அரங்கேற்ற வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டவில்லை.

* * *

செழியனின் கலைக்கோட்டம், புதுக்கோலம் பூண்டுவிட்டது. வஞ்சியின் சிலைக்குப் பக்கத்தில் செழியன், தன்னையே ஒரு சிற்பமாக வடித்துக் கொண்டிருக்கிறான். ஒரு சில நாட்களாக வஞ்சிவருவதில்லை. எஞ்சியிருந்த அவள் சிலையின் வேலையை முடித்து விட்டான். வஞ்சியின் வரவு தடைப்பட்டதில் இருந்து செழியன் "ஆ! நான் என் இன்னுயிரைக் காணாமல் ஏன் இருக்கிறேன்! இதோ கிணற்றில் விழுந்து சாகிறேன்" என்று எண்ணி எந்நாளும் கிணற்றுப் பக்கம் போனதில்லை. உயிரை விட்ட உடல் இது என்று எண்ணி எண்ணி, உள்ளம் உருகிவிடவும் இல்லை. வஞ்சி, வருவதில்லை—இது தான் அவனுக்குத் தெரியும். காலம், வஞ்சியை மாற்றிக் கொண்டிருந்தது. மாற்றி, மங்கையாக்கி விட்டது. வீட்டிலேதான் நீ இரு. வீதியில் சென்றால், வீணான பழி மிகும் என்றுசொல்லாமல் சொல்லி அவளின் பெற்றோர்கள் அவளை வீட்டிலேயே அடைத்து விட்டனர்.

அந்தக் கூண்டுக்கிளி எண்ணிற்று: "இன்னும் அவர் என் சிலையை முடிக்கக் கூட இல்லை. கையிலே கொஞ்சம் குறை. முடித்து விட்டாரோ என்னமோ? என் வரவை அவ்வளவு ஆசையுடன் எதிர்பார்க்கும் அவர் ஏன் இங்குவருவதில்லை? "இன்று வாராராயினும் நாளை வருகுவார்." வஞ்சி எண்ணிய அந்த எண்ணம் செழியன் அறிய முடியாத ஒன்று.

செழியன் தனது காதலனாக வாய்ப்பு இல்லை என்றறிந்ததும், அவள் உள்ளம் வெடித்து, வெதும்பத்தான் செய்தது. செழியன் தன்னைக் காதலிக்க வில்லை என்று தெரிந்ததும், அவளுடைய உள்ளம் புண்ணாகத்தான் செய்தது. புண்ணான உள்ளம் நாட்கள் பல கடந்து, ஆற்றுவாரற்று, அழுகிப் போன ஒன்றாயிற்று. அழுகிய புண் பின்னே அன்னையும் தந்தையும் செய்யும் மண ஏற்பாடுகளால், புழுத்துப்போன ஒன்றும் ஆயிற்று. இத்தனைக்கும் பிறகு தற்கொலை அந்த தளிர் மேனியாளைத் தழுவிக் கொண்டது. இரு கடிதங்கள் எழுதி முடித்தாள். தன் வாழ்வையும் முடித்தாள்.

அன்புள்ள அப்பா அவர்கட்கு,

இருபது வருடங்களாக நீங்
பாராட்டி வளர்த்த உங்கள் வ
கெஞ்சி கேட்டுக் கொள்கி
உங்கள் மன்னிப்பை. சி
போன பாலுக்கு, சிலநாள், கழு
அழுவது என்பார்களே, அதுபே
நான் செய்த காரியத்திற்கு, ம
னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது உள்ளம், பறிபே
ஒன்று. இந்த நிலையில் நீங்
என் கழுத்திலே, மஞ்சட் கயிற்
மாட்ட முற்பட்டீர்கள். இ
நான் விரும்பவில்லை. முன்ன
ஏன் இதைக் கூறவில்லை என்
குற்றம் சாட்டாதீர்கள். ஒரு பக்
பாடுபட்டு, இன்னால் பல ஏற்
மலர் ஒன்று கொண்டு வந்து
வுள் முன் படைக்கிறான்,
மனைவியின் நோய் தீரும் என்
எண்ணத்தில். பாவம்! அ
அறிய மாட்டான், அந்தக் கட
பூசாரிகளை வாழ்விக்குமே ஒழி
தன் நோய்தீர வழிவகுக்க
என்று. அந்த மலரை "கடவு
ஏற்றுக் கொள்ளவா போகி
அவர் வெறும் கற்சிலை தானே
கற்சிலைக்கு உணர்ச்சி ஏ
எனவே அந்த மலர் வாடி வத
சருகாகி விடும். இதை அ
தன் மனைவியின் நோய்தீரவில்
என்ற பிறகுதான், தெரிந்துகொ
வான். பின்புதான் அ
கூறுவான், "அட! அது ச
யில்லாத சாமியடா" என்
அதுபோலத்தான், அப்பா, ந
என்உள்ளத்தை ஊரின் ஒதுக்
புறத்தில் உள்ள ஒரு சிற்பி
காலடியில் வைத்து விட்டே
அவர் என் காதலை ஏற்
கொள்ளவில்லை என்று, இன்
தான் அறிந்தேன்.

அவர் என்னை கல்லிலே செ
கும்போது அவரை நான் என் உ
ளத்திலே செதுக்கி வைத்தி
தேன். அந்த இடத்தில் மற்
வரை வைக்க விரும்பாத நான்
கொலை செய்துகொள்ள, விரு
னேன். இதோ செய்துகொ
வும் போகிறேன். உங்களுக்
தெரிவிக்காமல் இறக்கும் உங்
வஞ்சி உங்கள் மன்னிப்பைத் தே
கிறாள்.

தங்கள், அன்புள்ள வ

* * *

(10-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

## உரையாடல்—
## புதிய பயணம்

காந்தியாருடன் நான் நிகழ்த்திய உரையாடல்கள் உணர்ச்சி நிறைந்தவை; கிடைத்தற்கரிய மாணிக்கக் குவியல்கள் போன்றவை.

அவருடன் நெருங்கிப் பேசுகிறபோது, நமக்கு ஏற்படுகிற மகிழ்ச்சிக்கும் மனக்கிளர்ச்சிக்கும் ஒரு பெருங் காரணம், அவர் தன் உள்ளத்தையே திறந்து காட்டிவிடுவதுதான். தன்னுடன் உரையாட வந்திருப்பவர்கட்கு, தன் உள்ளம் எப்படி வேலை செய்கிறது, அதன் உட்பகுதிகள் எப்படி எப்படி அசைகின்றன என்பதை யெல்லாம் அப்படி அப்படியே உணர்த்திவிடுகிறார். சாதாரணமாக, பெரும்பாலோர் பேசும்போது, ...கள் எண்ணங்களையெல்லாம் ...ன்றாகத் தொகுத்து, அவற்றை வகை வகையே பிரித்துச் சேர்த்து, அவற்றிற்கு ஒரு திட்ட வட்டமான உருவமும், முடிந்த முடிபும் கொடுத்து, யாரும் அவற்றை அசைக்க முடியாத நிலையில் பிறர்க்குத் தரவே விரும்புவார்கள். ஆனால், காந்தி அப்படி இல்லை. அவர் உள்ளத்தில் சிந்தனை இயந்திரம் சுழல ஆரம்பித்தவுடனே அதன் ஒவ்வொரு அசைவையும் நமக்குக் காட்டிவிடுகிறார். ஒரு எழுத்தாளன் கதையொன்றை எழுதுவதற்கு முன்னால் அதைப்பற்றிச் சிந்திக்கும்போது, கதைப் போக்கு, "இப்படி இருந்தால் நல்லது" என்று முதலில் ஒரு விதமாக எண்ணுவான். பிறகு, "இப்படி அல்ல—அப்படி இருக்க வேண்டும்." என்று தன் எண்ணத்தை மாற்றிக் கொள்வான். மற்றுமோர் சிந்தனை உள்ளத்தில் எழுந்து கதைப் போக்கை முதலில் எண்ணியதற்கு முற்றிலும் மாறாக மாற்றிவிடவும் கூடும். அவன் இறுதியில் எந்தப் போக்கு கதைக்குச் சிறப்புத்தரும் என்று முடிவு செய்கிறானோ அதே போக்கில் கதையை முற்றிலும் தீட்டி மக்களுக்குத் தருகிறான். அப்படியின்றி முதலில் அவன் எண்ணிய எண்ணங்களை யெல்லாம் கூட தனித்தனி புத்தகங்களாகப் போட்டுவிட்டால் அவற்றில் ஒன்றிற்கொன்று எவ்வளவு முரண்பாடு இருக்கும்! ஆனால் அப்படிப்பட்டதுதான் காந்தியார் உரையாடல். அவர் பேசிக் கொண்டே இருக்கும்போது தன் சிந்தனை மாறிவிட்டால், "மாறிவிட்டது" என்பதை ஒளிக்காமல் ஒப்புக்கொள்வார். இதனால் அவர் உரையாடல் ஒன்றிற்கொன்று முரண்பட்ட பல கருத்துகளின் தொகுப்பு போல் காணப்படும். ஆனால் உண்மை என்னவென்றால் அவர் பேசும்போது, பேசுவதோடு நிற்பதில்லை; உரத்த குரலில் சிந்திக்கிறார்.

நீங்கள் காந்தியிடம் போய் பேசும்படி அவரைக் கொஞ்சம் குத்திக் கிண்டிவிட்டால் போதும். பிறகு, அவருடைய உள்ளமென்னும் கருவூலத்திலிருந்து சிந்தனைச் செல்வங்கள் ஒவ்வொன்றாக வந்துகொண்டே இருக்கும். அவருடன் நாம் நடத்தும் ஒவ்வொரு உரையாடலும் ஒரு புதிய பயணம். அந்தப் பயணத்தின் கண்டுபிடிப்புகள், சில சமயங்களில் அவருக்கேகூட வியப்புண்டாக்கிவிடுகின்றன. அத்தகைய பயணங்கள் சிலவற்றை நான் மேற்கொண்டிருக்கிறேன். அதனால் நான் காந்தியிடமிருந்து நான் இவ்வளவு தெரிந்துகொண்டிருக்கிறேன். காந்தியைப்பற்றியும் இவ்வளவு அறிந்திருக்கிறேன்.

அவருடன் பேசும்போது, அவர், வெறும் புள்ளி விவரங்களையும் கருத்துரைகளையும் மட்டும் தருவதில்லை. தன்னையே விளக்கிவிடுகிறார். தன் கருத்துக் கோட்டைகளை இடித்துத் தூளாக்கக்கூடிய வெடி மருந்துகளைக்கூட தந்துவிடுகிறார். ஏன் என்று கேட்பீர்கள் நீங்கள். நான் சொல்கிறேன். அதுதான் காந்தி.

"இந்தியாவிலேயே மிகப் பெரிய நிகழ்ச்சி காந்திதான்" என்று வைசிராய் லின்லித்கோ ஒருமுறை என்னிடம் கூறினர். அது முற்றிலும் உண்மை. காந்தி ஓர் அதிசயமான தத்துவம். அவருடன் தொடர்பு கொண்டால் போதும், நம் உள்ளம் உணர்ச்சித் துடிப்பில் ஆழ்ந்துவிடும்.

—லூயி பிஷர்

---

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

...ார். நாம் செல்லவேண்டிய ...தை இது எனக் காட்டுகிறார். ...ம் நெஞ்சிலே உரிமைக் கனல் ...னன்றெழச் செய்கிறார். நாம் ...ழுக்கிவீழும் போதெல்லாம் ...டுத்து நிறுத்துகிறார்; வாடி ...தங்கினல் வாட்டம் போக்குகிறார்; களைந்து நின்றகாலை ...ழுச்சியூட்டுகிறார்; ஒடிந்து ...பான நெஞ்சங்களை இணைத்...க்காட்டுகிறார்: நமக்குள்ள ...ாத தொல்லையிடையும் தீராத ...ன்பம் நீட்டுகிறார். அவர் ...ளைவிட்டுப் பிரியவில்லை. இந்தத் ...ளக் கூடத்தைவிட்டுப் பிரியவில்லை. மனித சமுதாயத்தைவிட்டுப் பிரியவில்லை பிரியமாட்டார். ...முடியாது. பிரியும் எண்ணந்...ம் அவர்பால் இல்லை.

———

## கடலோரத்தில் காந்தியார்

அந்தச் சிறு மனிதரின் வாழ்க்கை ஓட்டத்தில், இந்தியா, விடுதலைபுரி நோக்கிச் செய்யும் பயணத்தை உலகம் கண்டது. பல்லாயிரக் கணக்

கான மக்கள் புடை சூழ, விடுதலைப் பாதையில் அவர் கொஞ்சம் கொஞ்சமாக ஆனால் உறுதியான முறையில், கண்டு வந்த முன்னேற்றம் முதலில் இந்தியப் பத்திரிகைகள் வாயிலாக, பிறகு, வெளிநாட்டு ஏடுகளின் வாயிலாக, உலக சமுதாயத்தின் கண்ணோட்டத்தை அவர் பக்கம் திருப்பிற்று. கடைசியாக, அந்தப் பயணத்தின் முடிவாக, கடலோரம் வந்து, காந்தியார், உப்புக் காய்ச்சியபோது, அதற்குரிய வரி கொடுக்க மறுத்தபோது, பிரிட்டானியத்தை எதிர்த்து சாத்வீகச் சட்ட மறுப்புச் செய்தபோது, இந்தியா தன்னையே உணர்ந்தது; உலகம் இந்தியாவை உணர்ந்தது. இந்தியக் கடிகாரத்தில் புது மணி அடித்தது. ஆயிரமாயிரம் பெண்கள்கூட அந்த நேரத்தில் தங்கள் குடும்ப வாழ்க்கை எனும் குகைகளை விட்டு வெளியே வந்து கர்ஜிக்கலாயினர். சிறையும் அழிவும் ஏற்போம் என்று முழங்கினர். தடியடி தர்பாருக்கு அஞ்சாது போராடினர். இந்தியாவின் முதுகெலும்பும் நிமிர்ந்தது. இந்தியா திடீரென்று தன் சக்தியை உணர்ந்தது. புது தைரியம் கொண்டு எழுந்தது. என்ன விலை கொடுத்தேனும், எத்தகைய கஷ்ட நஷ்டங்களுக்கு ஈடு கொடுத்தேனும் விடுதலை பெற்றே தீர்வது என்று சூள் உரைத்து விட்டது.

—பெசில் மாத்யூஸ்

## அழியாத சிலைகள்

காந்தியார் சிறந்ததோர் இந்திய தேசிய சக்தி. அதே சமயத்தில் அவர் ஒரு சர்வ தேசிய தலைவர். அவருடைய போதனைகளும் சாதனைகளும் கோடிக் கணக்கான மக்கள் உள்ளத்தில் என்றும் அழியாத இடம் பெற்றுவிட்டன. இந்திய மக்கள் மட்டுமே அல்ல, சாந்தியையும் சமாதானத்தையும் விரும்பும் மக்கள் உலகில் எங்கெங்கே இருக்கிறார்களோ அங்கெல்லாம் அவருடைய மரணம், ஆழ்ந்த துக்கத்தை உண்டுபண்ணியே தீரும்; அவர்கட்கெல்லாம், மேலும் மேலும், மனித சமுதாய நல்லுறவுக்கும் ஒற்றுமை வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டும் என்ற தியாக சிந்தனையையும் மனக் கிளர்ச்சியையும் ஏற்படுத்தியே தீரும். அவருடைய இந்த திடீர் மரணம் அமெரிக்க கண்டத்தையே அதிர வைத்துவிட்டது. துரதிர்ஷ்ட வசமாக, அவருடைய இலட்சியங்கள் முற்றிலும் நிறைவேறும் காலம் வரையில் உயிருடன் இருக்கமுடியாது போய்விட்டது. என்றாலும், அவருடைய வாழ்க்கையும் அதன் தொண்டும், இனி வருங்காலத்தில் என்றென்றும் அழியாத புகழ் படைத்த சிலைகளாய் இருந்து ஒளி வீசும் என்பது உறுதி.

—அமெரிக்கத் தலைவர்
ட்ரூமன்

## எப்போது வருவார்?

நம் அருமை பாபு, நாட்டின் தந்தை, மறைந்துவிட்டார். இந்தியா அனாதையாகிவிட்டது. அவரைப்போல மற்றொருவர் எப்போது வருவார்?

—சரத் சந்திர போஸ்

## மாயாவி, அலைகடலுக்கு அப்பாலிருந்து!

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால், தென்னாப்பிரிக்காவிலிருந்து ஓர் மாயாவி அலைகடலையுங் கடந்துவந்தார் இந்தியா நோக்கி. அவரே புதிய இந்தியாவின் தந்தை காந்திஜி.

—கவிக்குயில் சரோஜினி
தேவி.

## காந்தியாரில், இந்தியா!

காந்தியாரில் இந்தியாவை
நான் காண்கிறேன். இந்தி
வின் ஒற்றுமையை, விடுத
வேட்கையை, உடல் கட்டுண்
போதிலும் கட்டுக்கடங்கா
வீறுடன் விளங்கும் அத
உள்ளத்தை அவரிடம் காண்
றேன். இந்திய மக்கள் என
விரும்புகிறார்கள் என்பதை
அவர் சொல்லிவிடுகிறார். உல
வரலாற்றில் தோன்றியுள்
மிகப் பெரிய தலைவர்களில் அ
ஒருவர். அவருடைய இல
சியங்கள் முழுதும் நிறைவே
விடும் என்பதில் எனக்கு ஐய
கிடையாது.

—பெர்ல்ப

குடல் வாதமா?
கவலை வேண்டாம்
★
ஆப்ரேஷனோ பெல்
டோ தேவையில்லை.
விபரத்திற்கு 3 அ
தபால் தலையுடன்
எழுதுக.
ஜெயராம் வைத்தியசாலை
கும்பகோணம்.

## விழா

சென்னை சைதாப்பேட்டை
திருவள்ளுவர் கழகத்தின் சார்
பொங்கல் விழா, சென்ற திங்க
சிறப்புறக் கொண்டாடப்பட்ட
23-1-48 அன்று தோழர் ம. பொ
சிவஞானம் தலைமையில் அறி
கா. அப்பாதுரை அவர்களு
அடுத்த நாள் திரு. வி. க. அவர்க
தலைமையில் புதிய தமிழகம் எ
பது பற்றி மா. இளஞ்செழியனு
சொற்பொழிவாற்றினார். உள்
திராவிட இளைஞர் கழகத்தின் ச
பில் திரு வி. க. அவர்களு
வாழ்த்துரை மடல் வாசித்தளிக்க
பட்டது.